**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S.No.150/2018**

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 14.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருப்பதி | ஜாதி | : | |
| த/பெயர் | : | துரைமாணிக்கம் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி பரமேஸ்வரி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு ராஜகோபால், கண்ணன் மற்றும் ஊமைத்துரை ஆகியோர்களுக்கு எதிராக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். என்னால் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியும்.

வாதி வாய்க்கால் கேட்டு பிரதிவாதிகள் கொடுக்க மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி மற்றும் பிரதிவாதிகள் ஓரே ஊரில் தான் வசித்து வருகிறேன். நானும் அதே ஊரில் திலகர்வீதியில் வசித்து வருகிறேன்.வாதி பரமேஸ்வரிக்கு தாவா சொத்தை அசோக்குமார் என்பவரிடமிருந்து கடந்த 2011 ல் கிரையம் வாங்கினார். அவர் கிரையம் வாங்கிய விவரங்கள் எனக்கு தெரியும். அந்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேன்.

தாவா சொத்து ஆதியில் மணி மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் பெயரில் இருந்து வந்தது. கடந்த 2011 ல் வாதி கிரையம் வாங்கிய விவரங்கள் மற்றும் கிரையம் பெற்ற ஆவணத்திலுள்ள விவரங்கள் மற்றும் சர்வே எண் குறித்து எனக்கு தெரியும். வாதி புல எண்.457/9 மற்றும் 10 ஆகிய புல எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.மேற்கண்ட புல எண்களில் சுற்றியுள்ள சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றாலும், அரசு பாசன வாய்க்கால் மூலம் பாசன பெற்றுவரக்கூடிய நிலங்கள் என்றால் சரிதான்.அரசு வாய்க்கால் பெரியாற்றிலிருந்து ஓரே ஆறாக எங்கள் ஊர் வழியாக தாவா சொத்தின் வழியாக செல்கிறது.

அந்த வாய்க்காலில் வரும் தண்ணீரை வைத்து தான் காலம் காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வாய்க்காலை தவிர பாசனத்திற்கு வேறு வாய்க்கால் எதுவும் கிடையாது. வாதி பரமேஸ்வரிக்கு கிரையம் செய்து கொடுத்து நபர்களும் அதே அரசு வாய்க்காலில் வரும் தண்ணீரை வைத்துதான் பாசனம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் கடந்த 1988 ல் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ள நிலையில் யார் கிரையம் பெற்றார்கள் என்றால் மணி மற்றும் கந்தசாமி என்பவரிடமிருந்து அசோக்குமாரின் தகப்பனார் கிரையம் பெற்றார்.

வாதி பரமேஸ்வரிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 2018 பிரச்சனை ஏற்பட்டது. தேதி சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதிகள் அரசு வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சியதற்கு வாதி மறுப்பு தெரிவித்தார் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் வாய்க்கால் உள்ளதா என்பது குறித்து கிராம நிர்வாக அலுவலர் வந்து பார்த்தபோது தான் வாதி அந்த இடத்தில் வாய்க்கால் இல்லை என்று கூறினார். எனக்கு எழுதப்படிக்க தெரியும்.

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் கடைசி 3 வது வரியில் கடந்த 2018 நவம்பர் மாதத்தில் வாதி சொத்தின் வழியாக பாசனம் செய்ய தகராறு செய்தார்கள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி சொத்திற்கு பக்கத்தில் எனக்கு சொந்தமான விவசாய நிலங்கள் உள்ளதா என்றால் உள்ளது.

எனது சொத்தின் புல எண்.457/6 ஆகும். அந்த சொத்து எனது தாத்தாவிற்கு சொந்தமான விவசாய சாகுபடி நிலமாகும். தற்போது அந்த இடத்தை கடந்த 2013-ல் விற்றுவிட்டேன். நான் அந்த நிலத்தை விற்பனை செய்தற்கு பின்னிட்டு அந்த விவசாயம் செய்யவில்லை என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மீண்டும் அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறேன். வாதி சொத்திற்கு நான்கெல்லைக்கு பக்கத்தில் எனக்கு சொந்தமான சொத்து இல்லை என்றால் சரியல்ல. பக்கத்தில் தென்புறமாக உள்ளது. நான் குத்தகை செய்யும் நிலத்திற்கு தனியாக அரசு வாய்க்கால் உள்ளது.

வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது தொடர்பாக பிரதிவாதிகள் புகார் கொடுத்தார்கள். அப்போது நான் செல்லவில்லை. எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாமல் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு முரண்படும் விதமாக தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.18 18:11:36 +0530

District Munsif

Mannargudi.